

கழக இளைஞர் அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சங்கரன்கோவிலில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. நகர செயலாளர் பிரகாஷ்,மாவட்ட பொருளாளர் சரவணன்,ஒன்றிய செயலாளர் லாலா சங்கரபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் சீருடைகளை வழங்கினார்.உடன் ஒன்றிய செயலாளர் பெரியதுரை,நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி சரவணன்,நகர அவை தலைவர் முப்புடாதி, தொ.மு.ச.ஜெயராமன்,இளைஞர் அணி துணை அமைப்பாளர் சரவணன்,கார்த்திக்,அன்சாரி, அப்பாஸ் அலி,வீராச்சாமி, வீரமணி,காவல் கிளி,கணேஷ், ஜெயக்குமார்,கார்த்தி,ஜான் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பு கைலாசபுரம் தளபதி படிப்பகம் 8வது ஆண்டு விழா,கலைஞர் நூற்றாண்டு விழா, ஆகிய முப்பெரும் விழா கழக நெசவாளரணி சார்பில் மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள் ஏற்பாட்டில் 247 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று சீருடைகளை வழங்கினார். உடன் மாநகர செயலாளர் சுப்பிரமணியன்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,பகுதி செயலாளர் சுப்பிரமணியன்,நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, இளைஞர் அணி அலிப் மீரான், மீரான் மைதீன்,அமைப்புசாரா ஓட்டுனர் அணி நித்தியானந்தம் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! மாவட்ட தொண்டரணி சார்பில்

# புதுக்கோட்டையில் - கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம்!

## திருச்சி சிவா எம்.பி. - கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச. 4-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு.க மாவட்ட தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் 30.11.2023 வியாழன் அன்று காலை 10.00 மணியளவில் கே.வி.எஸ் மஹால் ஏசி (பட்டுக்கோட்டை ரோடு) அறந்தாங்கியில் கலைஞரின் தொலைநோக்கு பார்வை என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மு. கருணாகரன் வரவேற்புரையாற்றினார்.

சட்டம், நீதிமன்றங்கள் சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புத் துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி தலைமை வகித்தார்.

கலைஞரின் தொலைநோக்கு பார்வை என்ற தலைப்பில் மாநிலங்களவை குழுத் தலைவர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், கழக இலக்கிய அணி துணைத் தலைவருமான கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக தொண்டர் அணி துணைச் செயலாளர் சுப.சரவணன். மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, க.அடைக்கலம், மாவட்டப் பொருளாளர் ஜெ.அபுதாகீர், அறந்தாங்கி நகர கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் உதயம் சண்முகம், வே.பொன்துரை, டி.தங்கமணி. பொன்.கணேசன், அரு.வடிவேல்,

எஸ்.எம்.முகமது அப்துல்லா. அ.முத்து, எஸ்.குமார் (எ) துரைக்கண்ணு, ஏ.ஆர்.அழகு சிதம்பரம். பொன்.ராமலிங்கம், கே.சி.சிவக்குமார், ஏ.பழனிகுமார், தலைமைச்செயற்குழு உறுப்பினர் ஆர். ஆர்.கே.கலைமணி, இரா. ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர். வி.செல்வம், சீனி.பழனியப்பன், என்.வீரையா, ரெத்தினவேல், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் த.மணிராஜன், சிவ.பால.இளங்கோ, தி.முத்து, டாக்டர் சுதர்சன்,இ.ஏ.பெரியகருப்பன்,

ஏ. பாத்திமா பீவி, கே. ஆர்.இராமசாமி, ஹரி விமலாவதி, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், டி.வளர்மதி, மேகநாதன், சக்திவேல், எம்.தேவி, ஒன்றியப் பெருந்தலைவர்கள் மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து மற்றும் ஆலங்குடி செல்வராஜ்,

சாமி.சுரேஷ், எஸ். காளீஸ்வரன், ராஜ சரவணன், என்,ராஜா, நா.சரவணன். கே.நாகராஜன், கே.வி.மயில்வாகணன், டி. வி.சாத்தையா, ந.செ.முத்தையா. ரமேஷ். சு.சத்தியசீலன், செல்லத்துரை, இரா.தமிழ்ராசு, நசுருதீன், கண்ணன், த. பழனியபபன், க.செ.த.தென்னரசு, ஆலவயல் முரளி சுப்பையா மணிமொழியன்,

மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில்

மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சோ.ஆறுமுகம் நன்றி கூறினார்.

# திருவாரூர் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்!

## எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி. - பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

திருவாரூர், டிச.4-

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் கண்காணிப்புக்குழு தலைவர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம் எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்திற்குகண்காணிப்புக்குழு துணைத்தலைவர் எம்.செல்வராஜ் எம்.பி.,சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ,க. மாரிமுத்து, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டம் (ஊரகம்), பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத்திட்டம், தூய்மை இந்தியா இயக்கம், சான்சாத் ஆதர்ஸ் கிராம் யோஜனா கிராம வளர்ச்சித் திட்டம் முன்னேற்ற விபரம், பிரதம மந்திரி கிராம முன்னோடி திட்டம், ஜல்ஜீவன் மிஷன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், வேளாண்மைத்துறை, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டம், பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம், தீன்தயாள் உபாத்யாய கிராம மின்னொளி திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி, நான் முதல்வன், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் (அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம்), தூய்மை இந்தியா திட்டம், தொற்றா நோய்கள் கட்டுப்பாட்டுத்திட்டம், ஜனனி சிசு சுரக்ஷா காரியகாரம், ஜனனி சுரக்ஷா யோஜனா, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்திட்டம், பாரத பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதம மந்திரி கிராமின் டிஜிட்டல் சாக்ஸ்தரா அபியான் திட்டம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நிலப்பதிவுருக்கள் கணினிப்படுத்தும் பணி நில அளவைப்பதிவேடுகள் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாகம் குறித்தும் துறைவாரியாக கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் முதல்நிலை அரசு அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டு, திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் கேட்டறிந்தனர்.

தொடர்ந்து, அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் அலுவலர்கள் முழு முனைப்புடன் செயல்பட வேண்டும். சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகளை விரைவுப்படுத்த வேண்டும், மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டவர்களுக்கு உரிய நலத்திட்டங்கள் கிடைப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். முதியோர் ஓய்வூதியம் பெறுவதற்கான நடைமுறைகளை சாதாரண மக்களும் அறிந்;து கொள்ளும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும். வேளாண்மை துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் அனைத்து தரப்பு விவசாயிகளுக்கும் முழுமையாக கிடைக்கின்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்கின்ற வகையில் திட்டங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், ஒன்றியகுழு தலைவர்கள், நகர்மன்ற தலைவர்கள் .பேரூராட்சி தலைவர்கள் ,மாவட்ட வருவாய் அலுவலர் சண்முகநாதன், அனைத்து துறை அரசு உயர்அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

